## குணமடைவதில் நீங்கள் ஊக்கமுடன் இருங்கள்

- 

உங்கள் சிகிச்சை அணியுடன் இணைந்து முடிவெடுங்கள்
- கேள்விகள் கேட்டு விளக்கம் பெற்றுக்கொள்ளுங்கள்
- உங்கள் முன்னுரிமைகள், விரும்பும் குறிக்கோள்கள், கோட்பாடுகள், பலம், கரிசனைகள் முதலியவை பற்றிக் கலந்துரையாடுங்கள்
- உங்கள் கதையைக் கூறுங்கள்
- நீங்கள் மனவேதனை அடைந்திருக்கும்போது அல்லது உடல்நலம் குன்றியிருப்பதாக உணரும்போது உங்கள் சிகிச்சை அணிக்கு அறிவிக்கத் தயங்காதீர்கள்
- உங்களுக்கு உரைபெயர்ப்பாளர் ஒருவர் தேவையெனில், ஒருவரைத் தருமாறு கேளுங்கள்
- நீங்கள் மேலும் சுகவீனமடைந்தால், உங்களுக்கு ஆதரவளிக்கக்கூடிய ஒருவர் இருப்பின், அதைச் சிகிச்சை அணிக்குக் கூறுங்கள்
- உள்நோயாளர்கள், தயவுசெய்து எல்லா நேரங்களிலும் உங்கள் அடையாளக் கைவளையை அணிந்திருங்கள்
- உள்நோயாளர்கள், அனுமதிக்கப்படும்போது தயவுசெய்து உங்கள் புகைப்படத்தை எடுப்பதுடன் அதை ஒழுங்காகப் புதுப்பித்துக்கொள்ளுங்கள்

## உங்கள் மருந்தைப்பற்றி அறிந்திருங்கள்

- 
உங்கள் மருந்து எப்படியிருக்கும், அதைப் பாவிப்பதன் நோக்கம், அதை எப்போது எடுக்கவேண்டும் மற்றும் அதன் பக்கவிளைவுகள் பற்றி அறிந்திருங்கள்
- பக்கவிளைவுகள் பற்றி உடனடியாகத் தெரிவியுங்கள்
- பரிந்துரைக்கப்படாத மருந்துகள், விற்றமின்கள் மற்றும் வீட்டிலிருந்து கொண்டுவரப்பட்ட மருந்துகளை நீங்கள் பாவித்தால் உங்களது மருத்துவர், தாதி அல்லது மருந்தாளருக்கு உடன் தெரியப்படுத்துங்கள்
- உங்களுக்கு உணவு அல்லது மருந்துக்கு ஒவ்வாமைகள் இருப்பின், சிகிச்சை அணிக்குக் கூறுங்கள்

- நீங்கள் உங்கள் மருந்தை எடுக்க முன்னர், உங்களை அடையாளப்படுத்துவதை அல்லது நோயாளர் அடையாளக் கைப்பட்டியை அணிந்திருப்பதை உறுதிப்படுத்துங்கள்

## அந்தரங்கம்

**அந்தரங்கம் என்பது ஒவ்வொரு நோயாளியினதும் பாதுகாப்பின் ஒரு பகுதியாகும்.**




- எமது அனைத்து நோயாளர்கள், வருகையாளர்கள் மற்றும் ஊழியர்களது அந்தரங்கத்தைப் பாதுகாப்பதற்காக நிழற்படமெடுத்தல், ஒளிப்பதிவு அல்லது ஒலிப்பதிவு செய்தல் தடைசெய்யப்பட்டுள்ளது என்பதைத் தயவுசெய்து கவனிக்கவும்.

- நோயாளர்கள் அல்லது வருகையாளர்கள் செல்லிடப்பேசி அல்லது வேறு சொந்த மின்னணு சாதனம் ஊடாக நிழற்படமெடுத்தால் அல்லது பதிவுகள் செய்தால், அந்தச் சாதனம் கரும அலுவகத்தில் பூட்டிவைக்கப்படும் அல்லது வீட்டுக்கு அனுப்பப்படும்.

## தீயிலிருந்து பாதுகாத்தலும் புகைத்தலும்



- Ontario Shores புகைத்தல் தவிர்க்கப்பட்ட ஒரு சூழலாகும்
- தயவுசெய்து Ontario Shores இன் உள்ளே அல்லது வெளியே எங்கும் புகைக்கவேண்டாம்
- தயவுசெய்து எங்கள் புகைத்தலை நிறுத்தும் திட்டம் பற்றி உங்கள் சிகிச்சை அணியிடம் கேட்டறியுங்கள்
- தீ விபத்து ஒன்று ஏற்பட்டால், வெளியேற்றலுக்கான அறிவுறுத்தல்களைக் கவனித்துக் கேளுங்கள்
- உள்நோயாளர்கள், மாதாந்தத் தீ பயிற்சிகளில் பங்குபற்றுங்கள்

## விழுந்துபோவதைத் தவிருங்கள்

- 
- பொருத்தமான காலணிகளை அணியுங்கள்
- வழுக்காத காலுறைகளை அணியுங்கள்
- கைபிடிக்கும் தடைக்கம்பிகளையும் துணைக் கருவிகளையும் பாவியுங்கள்
- முன்பு வீழ்ந்தது பற்றியும் மருத்துவப் பிரச்சினைகள், வலிப்பு, மற்றும்/அல்லது போதைவஸ்து பாவனை பற்றியும் உங்கள் சிகிச்சை அணிக்குக் கூறுங்கள்
- உங்களுக்குக் கிறுதி, மங்கலான பார்வை அல்லது தலைச்சுற்று இருந்தால் உங்களுடைய சிகிச்சை அணிக்குக் கூறுங்கள்
- உங்களுடைய விழுதலைத் தடுக்கும் திட்டத்தில் ஊக்கமுடன் இருங்கள்
- வெளியில் செல்லும்போது காலநிலைக்கேற்ற பாதணிகளை அணியுங்கள்
- Ontario Shores வளாகங்களில் வெறும் காலுடன் செல்லாதீர்கள்
- நிலத்தில் ஏதாவது ஊற்றப்பட்டிருந்தால் அல்லது அந்நியமான பொருட்கள் இருந்தால் உடனடியாகப் பணியாளர்களுக்குத் தெரியப்படுத்துங்கள்

## உள்நோயாளர்கள் - உங்கள் பெறுமதியான பொருட்களைப் பாதுகாக்கவும்

- 
- உங்களுடைய பெறுமதியான பொருட்களை வீட்டுக்கு அனுப்புமாறு பரிந்துரைக்கப்படுகின்றீர்கள்
- உங்களுடைய பெறுமதியான பொருட்கள் மற்றும்/அல்லது பணத்தை எமது கரும அலுவலகத்தில் வைத்திருங்கள்
- கட்டிடம் 5, தளம் 3 இல் அமைந்துள்ள கரும அலுவலகத்தில் வைக்கப்படும் பெறுமதியான பொருட்களுக்கு Ontario Shores பொறுப்பாக இருக்கும்
- ஏனைய எல்லாச் சொந்த உடைமைகளையும் உங்களது அலுமாரியில் பாதுகாப்பாக வைத்திருங்கள்

## சமூகத்தில் வாழ்தல்



மருத்துவமனையிலிருந்து வெளியேற முன்னர் நீங்களும் உங்கள் சிகிச்சை அணியும் பின்வருவனவற்றை உருவாக்குவீர்கள்:

- சமூக வாழ்க்கைக்கு மாறும் திட்டம்
- நோய்வாய்ப்படுவதைத் தடுக்கும் உத்திகள்
- ஒரு இடர் நீக்கும் திட்டம்

நீங்கள் வீடுதிரும்பத் தயாராக இருக்கும்போது, நலமுடன் நீங்கள் இருப்பதற்கு அறிந்திருக்க வேண்டியவற்றை நீங்கள் புரிந்துகொள்கின்றீர்கள் என்பதைத் தயவுசெய்து உறுதிப்படுத்துங்கள்.

## கேள்விகள் கேளுங்கள்



கீழ்க் குறிப்பிட்ட பணியாளர்கள் உங்களுக்கு உதவி புரிவர்:

- உங்களது குணமாக்கல் அணி
- உங்களது சிகிச்சை முகாமையாளர்
- உங்களது நிர்வாக இயக்குநர்
- உங்களது மருத்துவ இயக்குநர்

மேலதிக உதவிக்கு நோயாளர் பாதுகாப்புத் தலைவரை 905.430.4055 நீட்டிப்பு 6019 இல் அல்லது இடர் மற்றும் நோயாளர் பாதுகாப்பு இயக்குநரை 6764 இல் தொடர்புகொள்ளவும்.